ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

तद्धै महामोहनमिन्द्रियाणां मिथ्यार्थयोगेऽस्यगतिर्हिनित्या ।
मिथ्यार्थयोगाभिहतान्तरात्मा स्मरन्नुपास्ते विषयान्समन्तात् ॥

ஓ! திருதராஷ்டிரமஹாராஜனே!! கீழ்க்கண்ட போகப்பிரவிருத்தியானது இந்திரியங்களுக்கு மஹா மோஹத்தை உண்டுபண்ணுகின்றது. (பிறகு) பொய்யான விஷயங்களில் சேர்க்கை ஏற்படும்போது ஸம்ஸார பந்தம் நியமமாக ஏற்படுகின்றது. பொய்யான விஷயங்களின் சேர்க்கையால் மறைக்கப்பட்ட அந்தராத்மாவை உடையவனாக எங்கும் விஷயங்களை (மட்டிலும்) நினைத்துக்கொண்டு அநுபவிக்கின்றான்.

எவனொருவன் நீக்கமுடியாத விஷயாசையைத் திடவிராகத்தால் அறுத்து அதனின்று விடுபடுகின்றானோ, அவன்தான் மோக்ஷாநந்தம் பெறுவான். விஷயமானது விஷத்தைக்காட்டிலும் கொடியதென்று நமது முன்னோர்களின் அபிப்பிராயம். விஷமானது உட்கொண்டவனை மட்டிலும் கொல்லும். விஷயமோ கண்ணால் கண்டவனையும், நினைத்தவனையும் கொன்றுவிடும். ஆகவே, மோக்ஷமடைய விரும்பும்பக்ஷத்தில் விஷயங்களை விஷம்போல் விலக்கிவிட்டு, சாந்தி, தாந்தி, முதலிய ஸத்குணங்களைக் கைக்கொண்டு குருபதேசவாயிலாக ஆத்மவிசாரஞ்செய்யப் பிரவிருத்திக்கவேண்டும். இதன்றி விஷயங்களை அனுபவித்துக்கொண்டே ஆத்மாவை அறிய இச்சிப்பது இயலாத காரியமாகும். இதைத்தான் மனுவும் விரிவுபடுத்தியிருக்கிறார்.

न जातु कामः कामानामुपभोगेन शाम्यति ।

பாஹ்ய விஷயங்களின் ஸம்பந்தத்தால்த்தான் ஆத்மாவின் யதார்த்த ஸ்வரூபம் விளங்காமல் மறைந்துவிட்டது. இதனால்த்தான் நமக்கு ஸம்ஸாரபந்தமுமேற்பட்டது என்றறியவேண்டும். ஸ்வயம் பிரகாசமாகிய ஆத்மாவுக்கு அகங்காரம் முதலிய உபாதிஸம்பந்தமேற்பட்டபோதிலும் அது உண்மையில்லை. உண்மையில் ஆத்மாவானது அனைவருக்கும் பரமப் பிரியமாயிருப்பதுபற்றி ஸதாநந்தஸ்வரூபமேயாகும். அதற்குத் துக்க ஸம்பந்தம் சிறிதுமில்லை. இந் நிர்விஷயாத்மானந்தமானது ஸுஷுப்தியில் யாவருக்கும் அனுபவ ஸித்தமேயாகும். ஆகையால் கானல் ஜலம் போன்ற விஷயங்களை வெறுத்து ஆத்மாவை அறிய அனைவரும் பிரவிருத்தித்து சுகிக்கவேண்டுமென்பது கருத்து. சுபம்.

V. J. S.

ஆலயப் பிரவேசப் பிரசாரம்.

தற்காலம் நம் இந்தியாவில், தொன்றுதொட்டு இமயமலை முதல் கன்யாகுமாரி வரையில் நீண்டு பரவிப் பிரஸித்தமாயுள்ள தீண்டாமையை வேறுடன் களைந்தெரிந்து, ஜாதி ஹிந்துக்களுக்கும், ஆதித்திராவிட ஸகோதரர்களுக்கும், ஒற்றுமை உண்டு பண்ணவேண்டுமென்ற உத்தேசத்துடன், அனேகர் ஆதித்திராவிடர்களுக்கு, ஆலயப்பிரவேசாதிகார விஷயமாய் பிரசாரம்நடத்தி வருகின்ற விஷயம் யாவருக்கும் தெரிந்திருக்கும். இவ்விதப் பிரசாரத்தால், நமக்குள் குழப்பமும், கலகமும் விருத்தியாகுமேயன்றி, யாதொரு நன்மையும் விளைவதற்கு அவகாசமில்லை.

தற்காலத்தில், தேவால்யங்களில் சரிவர பூஜாதிகள் நடக்காத காரணத்தால் தெய்வஸான்னித்யம், சிறிதளவுமில்லாமல் போய்விட்டது. இவ்விதமிருக்க, தீண்டாதவரெனக் கருதப்படுவோரையும், தேவாலயங்களில் பிரவேசிக்கும்படி அனுமதி அளித்துவிடுவோமானால், என்ன ஏற்படுமென்பது புலப்படவில்லை. அப்படி தேவாலயங்களில் வழக்கத்தை மீறி பிரவேசிப்பதால், ஆதித்திராவிடர்களுக்கு நன்மை என்ன ஏற்படுமோ அதுவும் தெரியவில்லை.

ராஜீய விஷயங்களில், ஸகல பாத்யதைகளையும் தாழ்ந்த வகுப்பினருக்கும் கொடுத்து உயர்த்திவிட்டால்ப் போதாதா? மகாத்மா காந்தி அவர்களுக்கும் "தீண்டாமையை ஒழிப்பதிலும் அதனால் ராஜீய விஷயங்களில் அவர்களின் முன்னேற்றத்திலும், தான்" முக்கிய நோக்கமேயன்றி, தேவாலயப்பிரவேசத்திலன்று,

இதனால், காந்தி மகானுக்கும் அதிருப்தி ஏற்படுமே யன்றி, திருப்தி ஏற்படமாட்டாது.

தீண்டாத வகுப்பினரை ஆலயங்களில் பிரவேசிக்கும்படி ஆரம்பாடுபடுர், தலைவர்கள், பஹிஷ்டா காலங்களில் ஸ்திரீகளை ஆலயங்களில் நுழையும்படி ஏன் பிரசாரஞ் செய்யக்கூடாது. அதுவும் எங்களுக்கு இஷ்டந்தான் என்பதும் ஒழுங்கான வாதமில்லை.

தேவாலயங்களில், பிரவேசிக்கவேண்டுமென்ற எண்ணம், இதுவரையில் எள்ளளவாவது ஆதிதிராவிடர்களுக்கு இருந்ததுண்டா? இதுவரையில், தாழ்ந்த வகுப்பினருக்கு, "பிறரால் நாம் தாழ்த்தப்பட்டுவிட்டோம்" என்ற எண்ணமாவதுண்டா? தாழ்ந்தவர்களை உயர்த்துவதற்கு பல துறைகளிருக்க, ஆலயத்துக்குள் நுழைவதை மட்டிலும், பிரதானமாய் பிரசாரம்செய்வது தலைவர்களுக்கு அழகல்ல. அன்றியும், இது விஷயமாய் உண்ணாவிரதமிருப்பதும் கல்லுடி மங்கத்தனந்தான் என்பதில் ஸந்தேகமில்லை. ஒரு வகுப்பாரை உயர்த்தி சுகமாக வாழும்படி செய்வதற்காக, மற்றொரு வகுப்பாரை, துன்பப்படுத்துவது நியாயமாகுமா? தாழ்ந்த வகுப்பினர்களுடைய, நீசச்செயல்களை அறவே ஒழிக்கும்படி பிரசாரஞ் செய்தால், அதுவே அவ்வகுப்பாருக்குச் செய்யும் நன்மையாகும்.

தீண்டாதவர்களை அனுக்ரஹிப்பதற்காகத் தான் நம்நாட்டு தேவாலயங்களில், உத்ஸவஸமயத்தில் பகவானுடைய ஊர்வலமும் ரதோத்ஸவமும் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாவரும் மறக்கலாகாது. அந்த ஸந்தர்ப்பத்தில் அவர்களுடைய தீண்டலும் தோஷமில்லை என்பது ஹிந்துசாஸ்திர சம்மதமேயாகும். இவ்விதம் உசிதமான வழியில் ஆதி திராவிடர்களிடம் அனுதாபம் செலுத்துவதிலும், அவர்களுக்கு ராஜீய விஷயங்களில் பல ஸௌகரியங்களைச் செய்வதிலும், சட்டசபையில் அவர்களுக்கு அதிகஸ்தானம் அளிப்பதிலும், மற்றுமுள்ள கோவில், குளம், கிணறு முதலிய சுகாதாரவசதி ஏற்படுத்துவதிலும் ஆக்ஷேபிப்பார் யாருமில்லை. இதன்றி புதியமார்க்கத்தில் கோவில்களில் நுழை

யும்படி தலைவர்கள் அவர்களைத் தூண்டிவிடுவதானது பலருக்கு வருத்தப்படக்கூடிய காரியமேயன்றி வேறல்ல. எங்களுடைய வருத்தத்தை லக்ஷ்யம்செய்யாமல் தங்கள் பிடிவாதத்தையே நிறைவேற்றுவதாகயிருந்தால் சிறு கோஷ்டியினராகிய நாங்கள் என்னசெய்யப்போகிறோம். நீங்களே கோவிலுக்குச் செல்லுங்கள், நீங்களே பூஜைமுதலியவற்றை செய்துகொள்ளுங்கள், உங்கள் ஸ்வாமி எங்களுக்கு வேண்டாம்'' என்று நாங்கள் மரியாதையாக ஒதுங்கிவிடுகிறோம். பிடிவாதத்துடன் பேசுபவர்களிடம், நியாயவார்த்தை ஏறுமா? ஆதலால் நெருக்கடியான இந்த சமயத்தில் வைதிகர்களாகிய நாம் ஒதுங்கிநின்று வேலை செய்யவேண்டுமென்பதுதான் முடிவாகத் தோன்றுகின்றது. இதன்றி எதிர்வாதத்திற்கு எள்ளளவும் நமக்கு ஸஹாயமில்லை. அரசாங்கமோ மதில் பூனையாய் இருக்கிறது. தலைவர்களோ தந் தலை நாட்டாமையாய் நடந்துவருகிறார்கள். தலைவர்கள் சொல்வதெல்லாம் தப்புக்கக்ஷி என்பது நிதர்சனமாயிருக்க வைதிகர்களுடைய கக்ஷியெல்லாம் தப்பென்பது மஹாவிபரீதமாயிருக்கிறது. கூடியசீக்கிரம் விவாஹ விஷயத்தில்போல் தேவாலயப்பிரவேச விஷயத்திலும் அரசாங்க நிர்ப்பந்தம் ஏற்படுவதற்கும் அறிகுறி அறிவுக்குப் புலப்படுகின்றது. ஆகையால் ஆதிதிராவிடர்கள் தேவாலயத்தில் பிரவேசித்தால் நாம் தேவாலயங்களை பஹிஷ்கரிக்கும்படித்தான் நேரிடும். கிருஹத்திலேயே பகவானைப் பூஜித்து ஸுகம் பெறுவோமாக. சுபம்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

ஸ்ரீ பகவத்கீதையும், வர்ணாச்ரம தர்மமும்.

(931-வது பக்கத்தொடர்ச்சி)

வேதங்கள் யாகங்களில் பிராணிஹிம்ஸை செய்யும்படி விதித்ததை, வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளாத பௌத்தாதிகள் ஆக்ஷேபித்து யாகஹிம்ஸை அசுத்தமென்று ஆக்ஷேபித்தார்கள். ஜைன பௌத்தாதிகள்கூட யாகத்தை ஆக்ஷேபிக்க

வில்லை. யாகத்தில் ஹிம்ஸை செய்யவேண்டுமென்பதையும் ஆக்ஷேபிக்கவில்லை. வேதங்களில் யாகஹிம்ஸையானது கட்டாய மாக விதிக்கப்பட்டிருப்பதால் அதைச் செய்து தீரவேணும் என்பதை அவர்களும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். ஆனால் அவர் களுடையஆக்ஷேபம் என்னவென்றால் அந்த ஹிம்ஸையால்ஸ்வல்ப பாபம் நேரிடுமென்றும் அதை யாகம் செய்கிறவன் அனுபவிக்க வேணும் என்பதே. இவ்விஷயத்தில் வேதத்தின் ஸித்தாந்தத்தை ஸ்திரப்படுத்திப் பௌத்தர்களின் அபிப்பிராயத்தைக் கண்டிக்கவே பிரம்ஹஸூத்ரத்தில் ஓர் அதிகரணம்பிரவிர்த்தித்தது. அந்தஸூத்ர பாஷ்யத்தில். வைதிக மதாநுஸாரிகளான மூன்று பாஷ்யகாரர் களும் ஒரேமாதிரியாக பௌத்தர்களைக் கண்டித்து யாகஹிம்ஸை வேதோக்தமாகையால் தோஷமற்றது என்றும் பாபமற்றதென் றும் ஸித்தாந்தம் செய்தனர். ஆகவே பௌத்தமதத்திற்கும் வைதிகமதத்திற்கும் யாகாதிஹிம்ஸை விஷயமாக அடியோடு விரோதமிருப்பதால் யாகஹிம்ஸை ஹிம்ஸையென்றும் அசுத்த மென்றும் நினைப்பவர்களுக்கு வைதிகமதத்தில் நிச்சயமாக இட மே கிடையாதென்பது ஸ்பஷ்டமாகிறது. இங்கு அத்வைதபாஷ்ய காரராகிய ஸ்ரீ சங்கராசாரியர். ஹிம்ஸை செய்யக்கூடாதென்கிற பொது விதியானது யாகஹிம்ஸையைச் செய்யும்படி விதித்திருக் கிற விலக்குவிதியால் பாதிக்கப்பட்டுவிட்டதால் யாகஹிம்ஸையில் தோஷமில்லையென்றார். ஸ்ரீசங்கராசாரியார் கீதை2வது அத்யாயம் 11-வதுசுலோக அவதாரிகையிலும்

"வைதிக கர்மங்கள் ஹிம்ஸையுடன் கூடியவைகளாதலால் அதர்மங்களென்கிற சங்கையும் செய்யலாகாது. ஆசார்யன் கூடப்பிறந்தவன் பிள்ளை, முதலானவர்களைக்கூடக் கொல்லுவ தாகிய மிகக்குரூரமானயுத்தமானது க்ஷத்திரியனுக்கு ஸ்வதர்ம மாகையால் அது அதர்மமாகாது.இந்தஸ்வதர்மத்தைச் செய்யா விட்டால் பாபம் நிச்சயம் வருமென்று பகவான் உபதேசிப்ப தால்யாகாதி நித்யகர்மங்களில் கட்டாயமாகச்செய்துதீரவேண் டிய ஹிம்ஸைகளும் தர்மங்கள்தான் என்று பகவனால் நிச்சய மாகச்சொல்லப்பட்டதாகிறது"

என்று யுத்த யாக ஹிம்ஸைகளைத்தர்மங்களென்றே நிச்சயித் தார்.

த்வைதபாஷ்யகாரராகிய ஸ்ரீ ஆனந்ததீர்த்தரும் மேற்படி ப்ரம்மஸூத்திர பாஷ்யத்தில் "வேதத்தில் சொல்லப்படாத ஹிம்ஸையைச் செய்வது பாபமேயல்லாது, வேதங்களில் விதிக்கப்பட்ட யாகஹிம்ஸையில் ஒரு தோஷமும் கிடையா"தென்று ஸ்பஷ்டமாகச் சொன்னார்.

நமது ஆசார்யர்களாகிய ஸ்ரீ பாஷ்யகார ஸ்ரீ தேசிகாதிகள் இவ்விஷயத்தில் இன்னொருபடி முன்சென்று இந்த ஹிம்ஸை ஹிம்ஸையே அல்லவென்றும், இது ரக்ஷணமென்றும் ஸித்தாந்தம் செய்தார்கள். இந்த யாகஹிம்ஸை ஹிம்ஸையே யல்லவாகையால் "ஹிம்ஸிக்கக்கூடா"தென்கிற பொதுவிதிக்குள் இது அகப்படக் கூடியதில்லையென்று நிர்ணயித்தார்கள். இவ்விஷயம் மேற்படி பாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் "எல்லா ஹிம்ஸைகளையும் விட்டு, யாகாதி ஹிம்ஸையை மட்டும் அநுஷ்டித்துவருகிற முமுக்ஷுவுக்கு புநராவிருத்தி கிடையா"தென்று போதிக்கவந்த சாந்தோக்ய சுருதியில் யாக ஹிம்ஸையை ஹிம்ஸையென்று அநுவதித்திருப்பதால் இது ரக்ஷணமென்று சொல்லத்தகுமோவென்று ஸ்ரீதேசிகன் சங்கித்து "யாகபசு முதலானவைகளுக்குப் பரலோகத்தில் உண்டாகிற விசேஷ நன்மைகளை யறியாத பாமரர்களுடைய எண்ணத்தையே அந்த சுருதி அநுவதிக்கிறதே யல்லாது அதற்கும் இது ஹிம்ஸை யல்லவென்பதிலேயே தாத்பர்யம்" என்று ஸமாதானம் அருளிச் செய்தார். இதுபோல் மநுஸ்மிருதியில் "யாகத்திலுவதமானது வத மாகாது" என்றுசொல்லுகையில் வதம்என்றுஅநுவதித்திருப்பதும் பாமரர்களுடைய எண்ணத்தையநுஸரித்ததே. அவதம் என்பதே தத்வமாகும் என்றும் ஸ்ரீதேசிகன்சொல்லி யாகாதிஹிம்ஸையை ஹிம்ஸையென்றே சொல்லக்கூடாதென்று நிர்ணயித்தார். ஆகை யால்தான் மநுஸ்மிருதியில் மற்றொரு இடத்திலும் வேத விஹித மான ஹிம்ஸையை "அஹிம்ஸை" என்றே நினைக்கவேணுமென்று நியமித்தார். யாகஹிம்ஸை ஹிம்ஸையே அல்லவென்றும், அது கட்டாயமாகச் செய்யப்படவேண்டிய தர்மமென்றும் கணக்கற்ற ஸ்மிருதிபுராணாதிபிரமாணங்களாலும் ஆசாரியர்களாலும்நிர்ணயிக் கப்பட்டிருப்பதை விஸ்தாரபயத்தால்இங்குகுறிப்பிடவில்லை. இந்த ஸித்தாந்தமானது கீதையின் பாஷ்யத்திலும் தாத்பர்ய சந்திரிகை யிலும் இன்னும் பலவிடங்களில் வெளியிடப் பட்டிருக்கிறது.

ஸ்ரீ தேசிகன் 'பரமதபங்கம்' என்கிற ரஹஸ்யத்தில் இவ்விஷயத்தை விளக்கியிருப்பதையும் இங்கு காட்டுவது பொருந்தும். அங்கு ஸ்ரீ தேசிகன் வாக்யமாவது—"தர்மாதர்ம வியவஸ்தாபகமான சாஸ்திரத்தினால் அக்னீஷோமாதி ஹிம்ஸைகளிலும், யுத்தத்தில் வதார்ஹன் விஷயத்திலும்,..பாபத்வசங்கைபண்ணவொண்ணாது. வைதஹிம்ஸை பசுவுக்கு ஹிததமமென்று சாஸ்திரமாகையால் அனர்த்த ஹேதுவன்று. இது சிகித்ஸகசல்யப்ரயோகாதி நியாயத்தால் ஹிததமமாம். ஆகையாலே ஸாங்க்யாதிகள் சொன்ன ஸ்வல்பதோஷ ஸங்காத்துக்கும் அவகாசமில்லை. இவ்வர்த்தத்தை अशुद्धमितिचेन्नशब्दात् என்று வேதாந்த ஸூத்ரகாரர் அருளிச் செய்தார்" என்று.

ஆனால் ப்ரத்யக்ஷத்தில் ஹிம்ஸையாயிருக்கிற விஷயத்தை "அஹிம்ஸை"யென்றும், ரக்ஷணம்என்றும் ஸாதிப்பது பொருந்துமாவென்று சிலர் நினைக்கக்கூடும். இதற்காகவே பாஷ்யத்திலும் தாத்பர்ய சந்திரிகையிலும், சஸ்திரசிகித்ஸையானது உதாஹரணமாகக் காட்டப்பட்டது. இங்கு ஹிம்ஸையென்றால் என்ன? அதற்கு லக்ஷணம் எப்படிச்சொல்வது, என்பதை யோஜிக்க வேணும். ஒருவனுக்கு துக்கத்தை உண்டுபண்ணுவதே ஹிம்ஸை யென்று சொன்னால், வைத்தியர்கள், சரீரத்தில் ஆயுதங்களைக் கொண்டு நோயாளி கதறித்துடிக்கும்படி மிகவும் உபத்திரவகரமான சிகித்ஸை செய்வதும் ஹிம்ஸையாகிவிடும். இதைஹிம்ஸை என்று ஒப்புக்கொள்ளுவது நியாயமா? ப்ராணனை எடுப்பதே ஹிம்ஸையென்றால், திருடர்களும், வேறு துஷ்டர்களும் ப்ராணனை எடுக்காமலே சரீரத்தில் பயங்கரமாகக் குத்தி காயங்கள் உண்டு பண்ணுவதும், ஒருவனுடைய ஸொத்துக்களனைத்தையும் பிறர் பரித்துக்கொண்டு போவதும், உயிருடன் அனுபவிக்கும் பற்பல கஷ்டங்களும் ஹிம்ஸையென்று சொல்லமுடியாமல் போய்விடும். ஆகவே, "தத்காலத்தில் சிரமத்தைக் கொடுப்பதும், பரலோகத்தில் அனர்த்தத்தை (பாபத்தை) உண்டுபண்ணக்கூடியது மானகார்யமே ஹிம்ஸை" என்று லக்ஷணம் ஒத்துக்கொண்டாலன்றிஒன்றும் ஸரிப்படாது, டாக்டர்கள் ஆயுதங்களால் சரீரத்தைக் கிழி வியாதிஸ்தன் கதறும்படி ஹிம்ஸை செய்தாலும், அது ஹிம்ஸை யாகிறதில்லை, ஏன்? அந்த ஹிம்ஸையானது வியாதிஸ்தனுக்கு தத்

காலத்தில் உபத்திரவகரமாயிருப்பினும், அது அவனை ரக்ஷிப்பதற்கென்றே செய்யப்படுகிறது. ஆகையால் அதைச் செய்கிறவன் எவ்வளவு கருணையற்றவனாயிருப்பினும் அவனை ஹிம்ஸை செய்பவனாக உலகமும், சாஸ்திரமும் நினைப்பதில்லை.

ஆகையால்தான் ஸ்ரீ பாஷ்யகாரரும், ஸ்ரீ தேசிகனும், யாக ஹிம்ஸைக்கும், யுத்தஹிம்ஸைக்கும், சஸ்திர சிகித்ஸையை உதாஹரணமாகக்காட்டினார்கள். யாகத்திலும், யுத்தத்திலும் கொல்லப்படும் ஸமயத்தில், அந்தப் பிராணிக்கு சரீரவேதனை இருந்தாலும், பிறகு, நல்ல சரீரம், நல்லுலகம் இவைகள் கிடைப்பதாக சாஸ்திரங்கள் உத்கோஷிப்பதால் இது ஹிம்ஸை லக்ஷணத்தில் அகப்படக் கூடியதல்லவென்றும் ரக்ஷணம், அல்லது அஹிம்ஸையே என்றும், ஸ்ரீ ராமாநுஜ ஸ்ரீ தேசிகாதிகளின் ஸித்தாந்தமாகும். இவ்வாறு யாக ஹிம்ஸையையும், யுத்த ஹிம்ஸைகளையும் மிகவும் புனிதமான கார்யமாயிருப்பதால் இவைகளை எந்த ஆஸ்திகனும் ஹிம்ஸையென்று நினைப்பதும், பேசுவதும், பழிப்பதும், நரகாதி மஹாபாபத்திற்கு இடமாகையால் அப்படிச்செய்யக்கூடாதென்று தடுத்து சாஸ்திரங்களும் மஹர்ஷிகளும், ஆசார்யர்களும் வேத மார்க்கத்தை ரக்ஷித்திருக்கிறார்கள். இவைகளைப் பற்றி புராணாதிகளில் எங்காவது நிந்தை காணப்பட்டால் அது அந்தப் பிரகரணத்தையனுஸரித்து மற்றொன்றை ஸ்துதிசெய்ய வந்ததாகுமேயன்றி, பிரமாணங்களில் மிக பிரபலமானதாகிய வேதங்கள் சொல்லிய தர்மத்தைத் துர்பலங்களாகிய புராணாதிகள் நிந்திக்கச் சக்தியற்றவைகளென்றும் ஸ்ரீ தேசிகாதிகள் நிர்ணயித்தார்கள். ஆகவே நமது நவீன மேதாவிகளுக்கும், ஹிம்ஸை, அஹிம்ஸை, வர்ணாச்ரமதர்மம் இவைகளுக்கு சாஸ்திரங்களையேநம்பவேண்டிய கடமையிருப்பதாலும், கீதையில் பகவான் கார்யம், அகார்யம், இவைகளுக்கு சாஸ்திரமே யாவருக்கும் கதியென்றும், சாஸ்திர விதிகளைக் கைவிட்டு ஸ்வச்சந்தமாகத் திரிகிறவர்களுக்கு நரகாதிகளே உண்டாகுமென்று ஸ்பஷ்டமாகச் சொல்லுவதாலும், நம்மவர்கள் தேசத்தில் பாவி வரும் குயுக்தியான நாஸ்திகவாதத்தை விட்டு, வேத ஸ்மிருதி சிஷ்டாசார மார்க்கத்தில் நின்று ஸகல சிரேயஸ்களையும் அடைவார்களாக.

உ

ஸ்ரீராமஜயம்.

பதினொன்றுவது வருஷத்திய

அத்வைதஸபை,

திருச்சிறுப்பள்ளி.

நாளது ஆங்கிரஸ-ஹு ஐப்பசி-மீ 26உ (11—11—32) சுக்ரவாரம்முதல் கார்த்திகை-மீ 1உ (15-11-32) மங்களவாரம் வரையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளுடையவும், ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளான ஜகத்குரு சிருங்ககிரி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுடையவும் அனுக்கிரஹத்தை முன்னிட்டு மலைவாசல் யக்ஞ மண்டபத்தில் வழக்கம்போல் ஐந்துநாள் அத்வைத ஸபை நடத்துவதாக நிச்சயிக்கப்பட்டிருப்பதால்பண்டிதர்களும், ஆஸ்திகர்களும் விஜயம்செய்து ஷை ஸபையை விமர்சையாக நடத்தித்தரவேண்டுமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸபைக்கு விஜயஞ்செய்யும் வித்வான்கள் ஸபையின் ஆரம்பத்திற்கே விஜயம்செய்யும்படி பிரார்த்திக்கிறோம். ஆரம்பத்திற்கே விஜயம்செய்ய முடியாமலிருந்தால் அதன் அவசிய காரணத்தை முன்னதாகத் தெரிவிப்பதுடன் ஸபையின் முதல்நாள் ஸாயங் காலத்திற்குள் அவசியம் செய்யவேண்டுமாகப் பிரார்த்திக்கிறோம். ப்ராசீன பண்டிதர்கள் இரண்டு அதிகரணங்களில் வாக்யார்த்தம் சொல்ல ஸித்தமாக விஜயம்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்,

ஸபையின் ஒவ்வொருநாளும் காலை மாலைகளில் பரீக்ஷை வாக்யார்த்தங்களும் உபந்யாஸங்களும் நடைபெறும்.

உபந்யாஸ விபரம் பிந்தி பிரசுரிக்கப்படும்.

தங்கள்,

திருச்சிறுப்பள்ளி, 26—9—23.

P.S. கிருஷ்ணமூர்த்தி அய்யர்,
R. ஸ்ரீனிவாஸய்யர்,

காரியதரிசிகள்.

பரீக்ஷை கொடுப்பவர்கள் பரீக்ஷை கொடுக்கப்படும் கிரந்தங்களின் விபரங்களை புரட்டாசி-மீ 25உக்குள் தெரிவித்தால் சேர்த்துக்கொள்ளப்படும். ஸபையின் இரண்டாவதுதினம் காலை 8-மணிக்கு ஒரேகாலத்தில் எல்லா வகுப்புகளிலும் லேகன பரீக்ஷை நடைபெறும்.

ஸாமவேதாய நம:

ஸாமகான பாட நிர்ணயம்.

நவராத்திரி வித்வத்ஸதஸ்ஸுக்கு வந்திருந்த வித்வான்களில் கோனேரிராஜபுரம் பிரும்மஸ்ரீ ராமஸ்வாமி ச்ரௌதிகள் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் அடியிற்கண்ட வித்வான்களும் இன்னும் பல லௌகிகர்களும் வைதிகர்களும் அடங்கிய ஸதஸ்ஸில் நாளது தேதியில் ஸாமகான பாடவிஷயமாய் நீண்டகாலம் சர்ச்சை செய்ததில் வரகூர் பிரும்மஸ்ரீ வேம்புச்ரௌதிகள் அவர்களால் தத்காலம் சாஸ்திர விரோதமாயும் கானத்திற்கு அனர்கமாயும் ஸம்ப்ரதாய ஸ்வரங்களுக்கு விரோதமாயும் "தாரவீகாத்ர வீணாச" இத்யாதி நாரதீய சிக்ஷாவசனங்களுக்கு விரோதமாய் ஹார்மோனியம் என்கிற அன்னியதேச நூதனக் கருவியைக் கொண்டு கானம்செய்துவருவதைக் கண்டித்தும் மன்னார்குடி மகாமகோபாத்யாயர் பிரும்மஸ்ரீ தியாகராஜமகிராஜர் என்ற ராஜு சாஸ்திரிகள் அவர்களால் வெகுநாளைக்கு முன்னமேயே பிரசுரிக்கப்பட்டிருக்கிற "கல்பிதபாடகண்டனம்" என்ற புத்தகத்தில் கண்ட ஸர்வ விஷயங்களை ஆமோதித்தும் ப்ராசீன ஸம்ப்ரதாய ஸ்வரத்தை அனுஸரித்துக் கானம்செய்துவருகிற பாடத்தைச்சாஸ்திரீயமென்றும் ஸர்வ தேவதா ப்ரீதிகரமென்றும் நமக்கு ஸர்வாபீஷ்டங்களையும் வர்ஷிக்கின்றவைகள் என்றும் ஸ்தாபித்து ஷை பாடத்தைக்கொண்ட ஸமஸ்த பாடசாலைகளிலும் ஸமஸ்த வேத பாராயணங்களிலும் ஸர்வச்ரௌதஸ்மார்த்த கர்மாக்களிலும் கானம்செய்துகொண்டு வருவதையே சாஸ்திரீயமென்றும், அது தான் ச்ரேயஸ்கரமென்றும் ஆதரித்து தீர்மானிக்கப்பட்டது.

1 பிரும்மஸ்ரீ ராமஸ்வாமிச்ரௌதிகள், கோனேரிராஜபுரம்.
2 பிரும்மஸ்ரீ ராமனாத ச்ரௌதிகள், திருவானைக்காவல்.
3 ,, நாராயணஸ்வாமிச்ரௌதிகள், திப்பிராஜபுரம்.
4 ,, ராமச்சந்திர தீக்ஷிதர், பின்னவாசல்
5 ,, ராஜகோபால தீக்ஷிதர், ,,
6 ,, K. V. ஸுப்ரமண்ய சாஸ்திரிகள், மதுரை.
7 ,, ராமனாதச்ரௌதிகள், மாயவரம்.

8 ,, விஜயேந்திராசார், திருவாதி.
9 ,, ராமச்சந்திர ச்ரௌதிகள், பரவக்கரை.
10 ,, முத்து தீக்ஷிதர், மணக்கால்
11 ,, ராகவ சாஸ்திரிகள், ,,
12 ,, சங்கரகனபாடிகள், ஊத்துக்காடு.
13 ,, பஞ்சாபகேசகனபாடிகள், குடுமியாமலை.
14 ,, கல்யாணசுந்தரகனபாடிகள், ,,
15 ,, அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியார் } கும்பகோணம்.
16 ,, ராமனுஜ தீக்ஷிதர், நல்லுச்சேரி.
17 ,, வைத்தியனுத தீக்ஷிதர், கூத்தூர்.
18 ,, வெங்கிட்டராம தீக்ஷிதர், ,,
19 ,, பஞ்சாபகேச சாஸ்திரிகள், மாயவரம்.
20 ,, சிவஸ்வாமி சாஸ்திரிகள், புதுக்கோட்டை.
21 ,, ராமஸ்வாமி சாஸ்திரிகள், உமையாபுரம்.
22 ,, ராமஸ்வாமி தீக்ஷிதர், விஷ்ணம்பேட்டை.
23 ,, மகாலிங்க கனபாடிகள், லால்குடி.
24 ,, ராமஸ்வாமி அய்யங்கார், சிகிரிடேரி தசராபோர்டு } புதுக்கோட்டை.
25 ,, அருணசல தீக்ஷிதர், ஆங்கரை.
26 ,, ராமச்சந்திரகனபாடிகள், மைல்ரங்கம்.
27 ,, ஸ்ரீநிவாஸாச்சார், காஞ்சீபுரம்.
28 ,, N. குப்புஸாமிதீக்ஷிதர், புதுக்கோட்டை.
29 ,, கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், ,,
30 ,, வெங்கிட்டராம ச்ரௌதிகள், காரைக்குடி.
31 ,, சங்கரநாராயணசாஸ்திரிகள், திருமலைராயசமுத்திரம்

G. மலையப்ப சாஸ்திரிகள்.

பஞ்சமர்களை தேவாலயங்களில் புகச்செய்வதில்

அதர்ம ஸாஹஸம்.

சென்ற சனி ஞாயிறு இவ்விரண்டு நாட்களிலும் தஞ்சை ஸ்ரீ காமாக்ஷியம்மன் ஸந்நிதியில் ப்ராம்மணர்களின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுமார் 500-ஜனங்களுக்குமேல் ஸ்த்ரீகளும் புருஷர்களும் விஜயம் செய்தனர். இந்த மாதிரியான கூட்டம் தஞ்சையிலிதுகாறும் கூடினதேயில்லையெனலாம்.

ப்ராம்மணர்கள் வரவர க்ஷீணதசையை யடைவதற்குள்ள காரணங்களைக் கவனிக்கவும் பரிகாரங்கள் தேடவும் கூட்டம்கூட துண்டுபத்திரிகைகள் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் மஹாத்மா காந்தி பிடிவாதப்பட்டினி கிடந்ததின் பயனாய் இராஜகீயவிஷயத்தில் ஏதோ சுவல்ப ஜயமடைந்து விட்டதிலிருந்து அவர் சிஷ்யர்களில்சிலர் குருவுக்கு மிஞ்சினவர்களாய்த் தீண்டாமையை ஒழிக்கவும் நம் கோவில்களுக்குள் பஞ்சமர்களைவிடவு மிதுவே வழி என்றுகருதி நடத்தும் ஸாஹஸங்களைக்கண்டிப்பதும் பஞ்சமர்களை கோவில்களில் விடும்பொருட்டு சட்டமேற்படுத்த சென்னை சட்டசபை மெம்பரால் கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவை ஆக்ஷேபிப்பதும் முக்கியமான விஷயங்களாக விருந்தமையால் அவைகளைப்பற்றி அடியில்கண்டபடி தீர்மானங்கள்நிறைவேறின.

அந்த சமயம் அங்கு விஜயம் செய்திருந்த கும்பகோணம் வக்கீல் மகா-௱-ஸ்ரீ M. K. வைத்யநாதய்யர் B.A.B.L. அவர்களை அக்ராஸனம் வஹிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

முதல் தீர்மானமானது தஞ்சை வக்கீல் மகா-௱-ஸ்ரீ தி. கோதண்டராமய்யங்காரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு மகா-௱-ஸ்ரீ க. வெ. லக்ஷ்மணசாஸ்த்ரிகளால் ஆமோதிக்கப்பட்டதும் ம ௱-ஸ்ரீ வக்கீல் ராதாகிருஷ்ணய்யரவர்கள் குருவாயூரில்ஸ்ரீமான்கேலப்பன் செய்யும் அஸத்யாக்ரஹ ஸாகஸத்தில் பிரமைகொண்டவராய் சில வாசகங்களை யெடுத்து விடவேண்டுமென்று ஆட்சேபித்தார். வருடைய ஆட்சேபனைகளுக்கு கும்பகோணம்பாங்கு ஸைடாக்

டரான மகா-ா.ஸ்ரீ S. மஹாலிங்கய்யர் B.A.B.L. அவர்கள் வெகு நிதானமாயும் அழகாயும் சமாதானம் சொல்லி முடித்ததும் பிரும்மஸ்ரீ தியாகராஜ சாஸ்த்ரிகள் அவர்களும் பிரும்மஸ்ரீ சிமிழி வெங்கடராம சாஸ்த்ரிகள் அவர்களும் பஞ்சமர்கள் தேவாலயங்களில் ப்ரவேசிக்கக் கூடாதென்பதற்குள்ள ஆதாரங்களை எடுத்து உரைத்தார்கள்.

முடிவில் 'ஸ்ரீமான் கேலப்பன் ஸாஹஸமானது தற்கொலை செய்துகொள்ள ப்ரயத்னம் செய்தல்' என்ற குற்றமாகிறதென்கிற வாசகத்தைமட்டில் நீக்கி தீர்மானம் ஏகோபித்து நிறைவேறியது.

மறுநாள் ஸ்த்ரீ தர்மத்தைப்பற்றியும் வரதட்சணையின் கொடுமையைப்பற்றியும் ப்ராம்மண குடும்பங்களில் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் வரவுக்கு மிஞ்சின செலவுகளைப்பற்றியும் கண்டித்து பிரும்மஸ்ரீ T L. சுப்பய்யர் அவர்களும் பிரும்மஸ்ரீ சிமிழி வெங்கடராம சாஸ்த்ரிகளவர்களும் உபந்யாஸம் செய்தார்கள்.

1—10—32 ல் நிறைவேறிய தீர்மானங்கள்.

(a) குருவாயூரில் ஸ்ரீமான் கேலப்பன் பட்டினிகிடக்கும் ஸாஹஸமானது அக்கிரமமான நிர்பந்தம்என்று கண்டித்து ஸமூக அமைப்புக்கும் மதங்களுக்கும் சட்டங்களுக்குமுள்ள அஸ்திபாரத்தையே அப்படி பட்டினி கிடப்பதினால் மாற்றிவிடுவதும் அழித்துவிடுவதும் சாத்தியமானால் பெரும் அபாயங்களை விளைவிக்குமென்று அபிப்பிராயப்படுகிறோம்.

(b) பொறுப்புள்ள ஸ்தானங்களை வஹித்தவர்களும் தகுந்த அந்தஸ்துகளிலுள்ளவர்களும் தங்களைச் சட்டவிரோதமாகவும் மதவிரோதமாகவுமுள்ள காரியத்தைச் செய்யும்படி கொடுத்திருக்கும் தந்திகளைக்குறித்து நாங்கள் விசனிப்பதோடு நம்பிக்கை துரோகமும் மத துரோகமும் செய்யும்படியாக இதற்குமுன் கேட்டிராத விதமாக தங்களுக்கு ஏற்பட்ட அநியாயமான நிர்பந்தத்திற்கு தாங்கள் உட்படாமல் அமரிக்கையாயும் தீரமாயும் நடந்த விஷயத்தில் நாங்கள் தங்களை மிகுந்தவணக்கமாய் சிலாகிக்கிறோம்'' என்று குருவாயூர் தேவாலயத்து டிரஸ்டியான கனம் ஜாமொரீன் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

2. பஞ்சமர்கள் தேவாலயங்களில் பிரவேசிக்கக்கூடிய பாத்தியத்தை புண்டுபண்ண உத்தேசித்து சட்டமூலமாய் நிர்பந்தம்

ஏற்படுத்துவதற்காக செய்யப்படும் பிரயத்தனங்களை ரொம்பவும் நாங்கள் கண்டிப்பதோடு அதற்காக மதிராஸ் சட்டஸபையிலாவது வேறு எந்த சட்டஸபையிலாவது கொண்டுவரப்படும் மசோதாக்களுக்கு அனுமதி கொடுக்கலாதென்று கனம் வைசிராய் அவர்களை பிரார்த்திக்கிறோம். அப்படி அனுமதி கொடுப்பதானால் தேசம் முழுவதும் அதிருப்தியும் பெருத்த ஆங்காரமும் உண்டாகுமென்றும் அப்படிப்பட்ட சட்டங்கள் மதத்திற்கும் மதக்கொள்கைக்கும் ப்ராசீன வழக்கங்களுக்கும் நீண்டகால பாத்தியங்களுக்கும் விரோதமாகுமென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தஞ்சாவூர்
ஆங்கீரஸஹு
புரட்டாசிமீ 18௳ } க. வெ. லக்ஷ்மண சாஸ்திரி,
கார்யதர்சி.

ஸாம கான பாட சர்ச்சை.

இப்பொழுது சுமார் 50-வருஷங்களாக ஸாமகான விஷயத்தில் புதுப்பாடமொன்று ப்ரவர்த்தித்திருக்கிறது. இந்தப் புதுப் பாடம் ஸாதுவா, பழைய பாடம் ஸாதுவா, என்ற விஷயம் இதற்கு முன் பலதடவைகளில் சர்ச்சை செய்யப்பட்டு முடிவாக மஹாமஹோபாத்யாயர் பிரும்மஸ்ரீ தியாகராஜமகிராஜர் என்ற ராஜு சாஸ்திரிகளவர்களால் பழையபாடம்தான் ஸாதுவென்று "கல்பிதபாடகண்டனம்" என்ற புஸ்தகமூலமாக ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படிக்கிருந்தாலும் புதுப்பாடத்தில் அவாவுள்ளவர்கள் மறுபடியும் ஸாமவேத சிரேஷ்டர்களை ஒன்றுசேர்த்து இந்தவிஷயத்தை சர்ச்சைசெய்வதாக யோஜித்து அதற்கு 11—9—32ஐ காலமாகவும் தேவகோட்டையை இடமாகவும் ஏற்படுத்தியிருந்தார்கள். அந்த இடத்தில் குறித்தகாலத்தில் கூடின சபைக்கு எதிர்பார்த்தபடி போதுமான வித்வான்கள் கூடாததால் ஷெ விஷயத்தை மறுபடியும் சர்ச்சைசெய்ய துலா மாதத்தில் பஞ்சநந்த க்ஷேத்ரத்தில் மறுசபை கூட்டப்போவதாகத் தெரிகிறது. அவ்விதமே ஸபையை கூட்டி ஷெ விஷயத்தை முடிவுசெய்வது சிலாக்கியந்தான். ஆனால் ஒரு ஸபை கூட்டுவதில் வெகு சிரமம் இருக்கிறது, போதுமான வித்வான்கள் வ்ராத

வரை ஸபை பூர்ணமாகாது. அப்படிப்பட்ட வித்வான்களைத் தருவிப்பதில் மிகுந்த சிரமமும் ஏராளமான பொருள் சிலவும் ஏற்படக்கூடும்.

புதுக்கோட்டை இராஜாங்கத்தில் பிரதி வருஷமும் நவராத்திரி மஹோத்ஸவத்தில் ஒரு வித்வத்ஸபை வெகு விமர்சையாய் நடக்கிறது. அது நாளது வருஷத்தில் 1—10—32ல் ஆரம்பமாகி 9—10—32ல் முடிவடையும். அந்த சபைக்கு 6—10—32 முதல் ஸர்வ சாஸ்திரங்களிலும், மூன்று வேதங்களிலும் பாரங்கதாளான வித்வான்கள் சுமார் 300, 400-பேர்கள்வரை வருகிறார்கள். இவர்களுடைய ஸர்வ ஸௌகர்யங்களையும் புதுக்கோட்டை இராஜாங்கத்தார் கவனித்துக்கொள்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மஹா ஸதஸ்ஸை என்ன பொருள் சிலவுசெய்தாலும் கூட்டமுடியாது. இந்த மஹா ஸதஸ்ஸில் எந்த விஷயமும் சர்ச்சை செய்யலாம். ஸதஸ்ஸியர்களும் ஸமர்த்தர்கள். இந்த ஸதஸ்ஸால் புதுப்பாடம் ஸாதுவா, பழையபாடம் ஸாதுவா, என்ற விஷயத்தை செய்வது உசிதமாக இருக்குமோவென்று இச்சர்ச்சையில் அபிப்பிராயம் உள்ளவர்களுக்கு பிரீதியுடன் தெரிவிக்கலானேன்.

புதுக்கோட்டை
27—9—32

ஓரபிமானி,
G. மலையப்ப சாஸ்திரியள்.

மனுஸ்மிருதி அத்தியாயம் (2)

சில வசனங்கள்

1. ஸ்த்ரீயோ, சூத்திரனோ யாரும் ஏதாவது நல்லகாரியம் செய்தால் அதற்கு விரோதம் செய்யக்கூடாது. அதை அவர்கள் விடாமல் ஒழுங்காய்ச் செய்யவேண்டும். சாஸ்த்ர சம்மதமான எந்த விஷயத்தில் அவர்களுக்கு பிரீதியோ அதை அவர்கள் நன்றாய்ச் செய்யலாம்.

2. தர்மம் அர்த்தம் இவ்விரண்டும் மேலானது என்று சிலர் சொல்கிறார்கள்; சிலர் காமம், அர்த்தம் இவ்விரண்டும் மேலானதென்று சொல்லுகிறார்கள். தர்மமே மேலானதென்று சிலரின்

அபிப்பிராயம். சிலருக்கு அர்த்தமே பெரிது. மூன்றும் அவ்சியமென்பதுதான் சரியான கொள்கை.

3. முக்கியமாய் பிராம்மணன், ஆசார்யர், பிதா, மாதா, தமையன், இவர்கள் என்ன கெடுதிசெய்தபோதிலும் அவர்களை ஒருஸமயமும் அவமதிக்கக்கூடாது.

4. ஆசார்யர் பிரம்மாவின் மூர்த்தி, தகப்பன் பிரஜாபதி ஆவார். தாய் பூமிதேவி; தமையன் தன் ஆத்மரூபமே; ஆகையால் தேவதாரூபமான இவர்களை அவமதிக்கக்கூடாது.

5. ஒருவன் பிறப்பின் விஷயமாய் தாய்தந்தைபடும் ச்ரமத்திற்கு நூறுவருஷத்திலும் ஈடுசெய்யமுடியாது.

6. இம் மூவர்களுக்கும் பிரியமானதைச் செய்கிறவன் தபஸால் கிடைக்கும் பயன் முழுமையும் அடைகிறான்.

7. இவர்களின் சொற்படி நடப்பதே முக்கியமான தபஸ் என்று சொல்லப்படுகிறது. அவர்களின் அநுமதியன்னியில் வேறு தர்மம் செய்யத்தக்கதல்ல.

8. அவர்களே மூன்றுலோகங்கள். அவர்களே மூன்று ஆச்ரமாதிகாரிகள்; அவர்களே மூன்று வேதங்கள். அவர்களே மூன்று ஹோம அக்நிகள்.

9. உண்மையில் தந்தை கார்ஹபத்யாக்நி, தாய் தக்ஷிணாக்நி குரு ஆகவநீயாக்நி இம் மூன்று அக்நியும் உயர்ந்தது,

10. இம் மூவர்களையும் சரியாய்பூஜிக்கிற பிம்மசாரி விளங்கவே விளங்குவான். கிரகஸ்தனுகியும் மூன்று லோகங்களிலும் மேன்மையை அடைவான். ஸ்வர்க்கத்தில் தன் சரீரகாந்தியால் ஸூர்யன்போல் பிரகாசித்து ஆனந்தமடைவான்.

R. ஸ்வாமிநாதய்யர்

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

அக்ஷய பாத்திரம்.

பாண்டவர் துர்யோதனன் முதலியவருடன் சூதாடினால்லவா? அதனால் பன்னிரண்டு வருஷம் காட்டிலும் ஒரு வருஷம் மறைந்து வஸிக்கும்படியும் நேர்ந்தது. சூதாட்டத்தினால் வரும் பயன் அப்படித்தானே இருக்கும்! பாண்டவர்கள் காட்டிற்குக் கிளம்பினர். அவருடன் பட்டணத்திலுள்ள எல்லோரும் கிளம்பினர். ஏன்? பாண்டவர் தர்மிஷ்டரல்லவா?

தர்மத்தைத் தழுவுவோர் எல்லோரிடமும் அன்பு பூண்டவராயிருப்பர். பாண்டவரில் மூத்தவர் தர்மர். அவர் தர்மஸ்வரூபி. அவர் எல்லோரையும் தன்னைப்போலவே நினைப்பவர். அவரிடம மற்றவர் ஆசைகொள்ளக் கேழ்க்கவேண்டுமா? அவரை விட்டுப் பிரிய எவருக்கும் மனம் வரவில்லை, ஆதலால் அவருடன் காட்டிற்குக் கிளம்பினர்.

அவர்கள் வெய்யிலில் வாடி காலால் நடப்பதைக்கண்டார். தர்மர் மனம் கஷ்டப்பட்டது. அவர்கள் வணங்கித் திரும்பிப் போகும்படி வேண்டினார். சிலர் அவர் சொற்படி திரும்பினர். பலர் அவரைப் பின்தொடர்ந்தனர். அவர்கள் ஆகாரமில்லாமல் வருந்தினர். இதைக் கண்டு தர்மர் மனம் கலங்கிற்று. என்ன செய்வதென்று யோசித்தார்.

தன்னுடன் வந்தவர்களை வணங்கினார். தனது ஏழ்மையைக் கூறினார். வந்தபடி திரும்பும்படி வேண்டினார். அவர்களோ ஆஹாரத்திற்காக வருந்தவேண்டாம். எங்கள் உணவை நாங்களே தேடிக்கொள்ளுகிறோம். உங்களுக்கும் கந்தமூலங்களைக் கொண்டு தருகிறோம் என்றனர். இதைக் கேட்டும் தர்மர் மனம் சாந்தி அடையவில்லை.

அதையே நினைத்து நினைத்து வருந்தினர். இந்த உத்தமனைக்கண்டு கௌசிக முனி வருந்தினார். தர்மர் அருகே சென்றார். இத்துன்பத்தை நீக்க ஓர் உபாயம் சொன்னார். தவத்தினால் ஆகாத காரியம் இல்லை. தவம் செய்து ஸித்தபெறு. உனது இஷ்டம் பூர்த்தியாகும் என்று உபதேசித்தார்.

ஆர்யதர்மம்.

இதைக் கேட்டு தர்மர் தம் புரோகிதரிடம் சென்றார். தன் வருத்தத்தைத் தெரிவித்தார். அவர் சற்று நேரம் த்யானம் செய்தார். ஸூர்யனுடைய கிரணத்திலிருந்தே மழை உண்டாகிறது; பானுவே செடிகொடிகளை வளர்க்கிறார். அவனையடுத்து பல அரசர்கள் நன்மை பெற்றனர்.

அதே போல் நீயும் சூர்யனைச் சரணமடை என்றார். அங்ஙனமே தர்மர் தௌம்யரிடமிருந்து உபதேசம் பெற்றார். மிக்க நியமத்துடன் கழுத்தளவு ஜலத்தில் நின்று ஜபித்தார். உடனே ஸூர்யபகவான் எதிரில் தோன்றினார். ஓர் தாம்ர பாத்திரத்தைக் கொடுத்தார். அதிலிருந்து வேண்டிய அன்னம் கிடைக்கும்.

திரௌபதி புஜித்து அதை அலம்பிக்கவுக்கும்வரை யதேஷ்டமாக அன்னங்கிடைக்கும். வனவாஸத்திலுள்ளவரை பனிரண்டு வருஷம் இது உங்களுக்குச் சகாயமாயிருக்கும் என்று கூறி மறைந்தார். அதேபோல் அதிலிருந்து ப்ரதிதினம் ஏராளமான அன்னம் கிடைத்தது.

அதைக் கொண்டு வந்தவருக்கு தர்மர் அதிதிபூஜை செய்து வந்தார். தர்மர் மனம் குளிர்ந்தது. அவர் தர்மசாலி ஆனதால் ஸூர்யன் அவரிடம் கருணைகொண்டார். தர்மிஷ்டர்களைத் தேவர் கைவிடமாட்டார். அந்தஸ்துதி தேவேந்த்ரனால் ஆதியில் சொல்லப்பட்டது. அவரிடமிருந்து நாரதர் கற்றார்.

நாரதர் அதைத் தௌம்யருக்குரைத்தார். தர்மர், அவரிடம் உபதேசம்பெற்றார். நல்ல குருவை அண்டியதால் தர்மருக்கு யாதொரு குறையுமில்லை. தானே தர்மம் தவறாதிருந்ததால் முடிவில் ஜயத்தையும் கீர்த்தியையுமடைந்தார். தர்மமே காமதேநு. அதை அண்டியோருக்குத் துன்பமில்லை.

வே. ஸோமதேவ சர்மா

வாரவிருத்தாந்தம்.

மதத்தில் தலையிடாதே! 1உ ஜபல்பூர் ஆஸ்திகர் ஸ்ரீராமலீலா உத்ஸவத்தைக் கொண்டாட ஆரம்பித்தனர். ஜில்லா காங்க்ரஸ் ஸபை அடக்குமுறையில் இறங்கிய அரசாங்கத்தைக் கண்டிக்க அறிகுறியாக ஷெ உத்ஸவத்தை நிறுத்தவேண்டுமென்றது. காங்க்ரஸோ அரசாங்கமோ மதத்தில் தலையிடுவது தப்பு என்று எடுத்துக்காட்டி ஸ்ரீகாந்திக்குத் தந்திகொடுத்து வழக்கம்போல் உத்ஸவத்தை நடத்தினர். எல்லையில்லாமல் எல்லா இடத்திலும் பிரவேசிக்கும் காங்க்ரஸைக் கண்டிப்பதுடன் மதாபிமானங்கொண்ட மஹாஜனங்களைக் கொண்டாடுகிறோம்.

ஸத்புத்ரன். 2உ பெரியதளத்தில் ஓர் கனவான் தனது தந்தையின் சிராத்த தினத்தைக்குறித்து ஆயிரத்தைநூறு ஏழைகளுக்கு அன்னமிட்டார். இங்ஙனம் அவர் ஏழு வருஷமாகச் செய்துவருகிறார். பெற்றோர் பிழைத்திருக்கும்வரை அவர் சொற்படி நடத்தல், அவர் இறந்த தினத்தில் யதேஷ்டமாக அன்னமளித்தல், கயையில் பிண்டமளித்தல் இம் மூன்றைச் செய்வதால் தான் புத்ரன் ஸரியான புத்ரனாவான் என்பது சாஸ்த்ர கொள்கை.

தீரர்கள். 5உ ஸ்ரீரங்கத்தில் பஞ்சமர்கள் ஆலயப் பிரவேச விஷயமாக ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று. வழக்கப்படி பலர் வாசாமகோசரமாக ஸதாசாரத்தைத் தாக்கிப் பேசினர். இடையே அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான் பிரும்மஸ்ரீ ஸௌம்ய நாராயணஸ்வாமிகளும் ஸ்ரீமான் திருவானைக்காவல் ராமநாதசாஸ்திரிகளும், புதுக்கோட்டை ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸாசார்யரும் வர்ணாச்ரம தர்மத்தின் கொள்கையை விலக்கி ஆலயத்தில் பஞ்சமர்களை விடக்கூடாதென எடுத்துக்காட்டினார்கள். இங்ஙனம் செய்வது பண்டிதர்கடமையேயாகும். எதிரிகளது ஸபையில் தீரமாக நமது கொள்கையை எடுத்துக் கூறிய பண்டிதர்களுக்கு ஆஸ்திகரது நன்றி பல.

கன்யகாபூஜை. ஸ்ரீ சாரதா நவராத்திரியைக்குறித்து ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கரபகவத்பாதாளது மடத்தில் லக்ஷார்ச்சனை லக்ஷஹோமம் பிராம்மணஸுவாஸினீ ஸமாராதனை முதலியவை மிகச் சிறப்பாக நடந்தது. ப்ரதிதினம் பகவத்பாதாள் ஒவ்வோர் கன்யகையை சாஸ்திர விதிப்படி அர்ச்சிக்கும் காக்ஷி சென்னைக்

குப் புதிதாதலின் எல்லோருள்ளத்தையும் இழுத்தது. இக்காலத்தில் பிக்ஷை நடத்திவைத்தவர்களே மிக்க பாக்யசாலிகள் ஆவர்.

ஸ்ரீ நாரத புராணம். 7உ சென்னை ஸ்ரீ சங்கரமடத்தில் ஷ்டி புராணம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு பகவத்பாதாருளால் பாகவதம், பாத்மம், பிரும்மவைவர்த்தம், பிரும்மாண்டம், பிரும்மம், மார்க்கண்டேயம், வாமநம், கூர்மம், என்ற எட்டு புராணங்கள் உபன்யஸிக்கப்பட்டன. பதினெண் புராணங்களும் அங்கு உபன்யஸிக்க உத்தேசமுளது. ஸ்ரீ குரு கிருபையால் அவை கைகூடவேண்டும்.

வழி காட்டுகிறது. 9உ சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் ஸரஸ்வதி பூஜையை வெகுவிமர்சையாகக் கொண்டாடியது. முற்றிலும் வைதிகமுறையில் ஆங்கிலங்கற்கும் மாணவர்களுக்கும் வைதிக ச்ரத்தை உண்டாகும்படி பூஜை, அஷ்டோத்தரம் பஜனை முதலியவைகளுடன் ஸரஸ்வதிபூஜை செய்வதின் பயனென்ன என்று ஓர் பண்டிதரைக்கொண்டு உபன்யாஸம் செய்விக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர் மிக்க ச்ரத்தையுடன் தர்சநம் செய்தனர். பலவழிகளிலும் இக்கலாசாலை ஆஸ்திக்யம் விநயம் பக்தி மதாபிமானம் முதலியவைகளைப் போதிக்கிறது. தலைவரது நன்முயற்சியே இதற்குக் காரணமாகுதலின் அவர் நீண்டஆயுளைப் பெறுவாராக! மற்றசாலைகள் இதைப் பின்பற்றுக.

குணத்தைக் கோள். 8உ சென்னையில் ஸ்வதேச மித்ரன் பத்ரிகைக்கு ஐம்பதாமாண்டுவிழா நடைபெற்றது. அதன் ஆசிரியர் ஸ்ரீஜகத்குரு பகவத்பாதாளிடம் சென்று விக்ஞாபித்துக் கொண்டதன்மேல் ஸ்ரீபகவத்பாதாள் அதற்கு ஓர் ஸ்ரீமுகமளித்து ஆசீர்வதித்தார்கள். அது முற்றிலும் ஸநாதந தர்மத்தை அவலம்பிக்காவிடினும் அது செய்தவரை அதன் குணத்தை ஆமோதித்து மற்றவாளுக்கும் ஸ்ரீமதாசார்யாள் உபதேசிப்பது போலிருக்கிறது. விஷத்தைக் கழுத்திலும் சந்த்ரனைத் தலையிலும் வைத்திருக்கும் சிவன் போதிப்பதுபோல் ஸ்ரீமதாசார்யாள் பிறர் தோஷத்தை அடக்கி குணத்தை ச்லாகி என போதிக்கின்றனரெனலாம்.

வே. ஸோமதேவ சர்மா.



ASKOT